# எம்.எல்.ஏ. - எம்.பி.க்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

அதேபோன்று, பல்வேறு ஆய்வுகளின் மூலமும், தமிழ்நாடு மாநில திட்டக் குழு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மதிப்பீடு செய்ததன் அடிப்படையிலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளதோடு, சத்தான உணவினை வழங்குவதன் காரணமாக பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகையும் அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், வேலைக்குச் செல்லும் தாய்மார்கள், காலை உணவு தயாரிக்கும் நேரம் மற்றும் பொருட்செலவு மீதமாவதோடு மட்டுமல்லாமல், தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் படிப்புத்திறன் அதிகரித்துள்ளதை கண்டு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்து வருவதாக திட்டக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், 'பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்' என்ற தமது அரசின் உன்னத நோக்கத்தை எய்திடும் வகையில், தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கும் இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்திட அறிவிப்பு வெளியிடப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான 15-7-2024 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில், தான் அதனைத் தொடங்கி வைக்கவுள்ளதாகவும், அன்றையதினம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிக்குட்பட்ட ஊரகப் பகுதியிலுள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

11-7-2024 அன்று விழுப்புரம் மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களிலும்; மேலும் 15-7-2024 அன்று அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பான முறையில் நடைபெறவுள்ள மேற்படி திட்டங்களின் விரிவாக்க நிகழ்ச்சிகள் தொடர்பாக உரிய அறிவுரைகள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்நிகழ்வுகளில் அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவும், ஆதரவினை வழங்கிடவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 2 நாட்கள் பிரச்சாரம்!

### வரும் 7, 8 ஆம் தேதிகளில் பிரச்சாரம் செய்கிறார்!



சென்னை, ஜூலை 5 -

விக்கிரவாண்டி தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவாக வரும் 7, 8 ஆகிய தேதிகளில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவாக அமைச்சர்கள், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.

**7, 8 ஆகிய தேதிகளில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்**

7ஆம் தேதி : திருவாமத்தூர், காணை, பனமலைப்பேட்டை, அன்னியூர்.

8ஆம் தேதி : தும்பூர், நேமூர், ராதாபுரம், விக்கிரவாண்டி பேரூராட்சி

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

## பாம்பன் சுவாமிகள் கோயில்

# குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க மறுப்பு!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூலை 5-

திருவான்மியூர், அருள்மிகு பாம்பன் சுவாமிகள் திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க மறுத்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருவான்மியூர், அருள்மிகு பாம்பன் சுவாமிகள் திருக்கோயிலில் 12.7.2024 அன்று நடைபெறவுள்ள குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க கோரியும், மேற்கண்ட திருக்கோயிலில் மயூர வாகன சேவை திருவிழாவினை நடத்துவதற்கு எந்த சபைக்கு உரிமையுள்ளது என்பதை முடிவுசெய்திட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி இந்து சமய அறநிலையத்துறை சென்னை மண்டல இணை ஆணையரால் நடத்தப்படும் விசாரணையில் தங்களையும் அனுமதிக்கக் கோரியும் மயூரபுரம் குரு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசர் அன்னதான சபையால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு நேற்று (04.07.2024) நீதியரசர் திருமதி வி.பவானிசுப்பராயன் முன் விசாரணைக்கு வரப்பெற்றது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின் குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க மறுத்தும், மனுதாரர் குடமுழுக்கு விழாவில் கலந்துக்கொள்ளலாம் எனவும், குடமுழுக்கு விழாவில் இடையூறு ஏற்படுத்த கூடாது என உத்தரவிடப்பட்டது.

குடமுழுக்கு விழாவில் இடையூறு ஏற்படுத்த மாட்டேன் என மனுதாரர் சார்பில் உறுதியளிக்கப்பட்டது. அதனை பதிவு செய்துக்கொண்ட நீதிமன்றம், குடமுழுக்கு முடிந்த 2 வாரங்களுக்கு பிறகு இணை ஆணையரால் விசாரணை தொடங்கப்பட வேண்டும் எனவும், 6 மாத காலத்திற்குள் விசாரணை முடித்து உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் சென்னை உயர்நீதிமன்றத்தால் உத்தரவிட்டுள்ளது.

## தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு சங்கங்களில்

# 63 லட்சம் உறுப்பினர்கள் பெயர் நீக்கம்!

### அ.தி.மு.க. ஆட்சியில் போலியாக சேர்க்கப்பட்டவர்கள்!

சென்னை, ஜூலை 5

தமிழ்நாட்டில் 23 ஆயிரத்து 149 கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. இந்த சங்கங்களுக்கு 5 ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்பட்டு தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர்.

கடந்த 2018ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் போது கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடந்தது. அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டாக இருந்த நிலையில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அவர்களின் பதவிக் காலத்தை 3 ஆண்டாக குறைத்து சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளிக்காததால் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் 5 ஆண்டு பதவியில் நீடித்தனர்.

இந்த நிலையில் பெரும்பாலானவர்களின் பதவிக் காலம் கடந்த ஆண்டு முடிந்து விட்ட நிலையில் கூட்டுறவு சங்கங்களுக்கு மீண்டும் தேர்தல் நடத்த தமிழக அரசு ஆயத்த பணிகளை மேற்கொண்டு வந்தது. இதற்காக கூட்டுறவு சங்கங்களின் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்றது.

கூட்டுறவு சங்க உறுப்பினர்களில் இறந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களது ஆதார்கார்டு, ரேசன் கார்டுகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பலரும் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்திருந்தனர்.

ஆதார்கார்டு, ரேசன் கார்டுகளை சமர்ப்பிக்காதவர்கள் பெயர்கள் கூட்டுறவு சங்க வாக்காளர் பட்டியலில் இருந்து தற்போது நீக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் அ.தி.மு.க. ஆட்சியில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களில் 63 லட்சம் பேர் இப்போது நீக்கப்பட்டு உள்ளனர்.

இது குறித்து கூட்டுறவு சங்க அதிகாரி கூறுகையில், "கடந்த ஆட்சியில் சேர்க்கப்பட்டு தற்போது வரை மொத்தம் 1 கோடியே 90 லட்சத்து 26 ஆயிரத்து 152 பேர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 63 லட்சத்து 22 ஆயிரத்து 288 பேர் தகுதியற்றவர்கள் என கண்டறியப்பட்டதால் அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த, ஆதார் கார்டு ரேசன் அட்டை கட்டாயம் இணைக்க வேண்டும் என்று கூறி உள்ளோம். அதன் அடிப்படையில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடை பெற்று வருகிறது.



விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் அன்னியூர் சிவாவை ஆதரித்து அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் திண்டுக்கல் ஐ லியோனி ஆகியோர் இணைந்து, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கொண்டியங்குப்பம், கூடலூர், டட்நகர் பகுதிகளில் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வின் போது மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மாவட்டப் பொறுப்பாளர் கௌதம சிகாமணி, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், ஒன்றிய செயலாளர் கல்பட்டு ராஜா, பகுதி செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம் மாவட்ட அமைப்பாளர்கள் ப.பிரகஷ், துபாய் வி.ஆர்.விஜய், திருமலை பொண்ணுரங்கம், சினிவாசன் மற்றும் வட்ட செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

## சிவகங்கையில் - ரூ.50 லட்சத்தில் - மாமன்னர்கள்

# மருது பாண்டியர்களுக்கு சிலை! முதல்வருக்கு நன்றி!

### முன்னாள் எம்.எல்.ஏ., வே.ராஜசேகரன் பிறந்த நாள் விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு !



சிவகங்கை, ஜூலை 5 -

சிவகங்கையில் முன்னாள் எம்.எல்.ஏ .வே. ராஜசேகரனின் 85 ஆவது ஆண்டு பிறந்தநாள் மற்றும் 70 ஆண்டு பொதுவாழ்வினை பாராட்டும் நிகழ்ச்சி விழா குழு தலைவர் மூத்த வழக்கறிஞர் எம். மோகனசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வே.ராஜசேக ரனை பாராட்டி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது:

சிவகங்கை நகர்மன்ற தலைவராகவும், சிவகங்கை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் ,சென்னை ஆர் .கே நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வும் பணியாற்றியவர் ராஜசேகரன். இன்று 85வயதினை நிறைவு செய்கிறார். 70 ஆண்டுகள் பொது வாழ்வில் ஈடுபடுத்தி வருகிறார். தொடர்ந்து அரசியல், சமூக சேவைகளை செய்து வருகிறார் . அவர் நகர் மன்ற தலைவராக இருந்த பொழுது ஒன்றிய குழு தலைவராக பதவி வகித்த போதும் இப்பகுதியில் பல்வேறு நல்ல செயல்களை செய்துள்ளார். சிவகங்கை தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டிருந்தால் பல்வேறு திட்டங்களை சிவகங்கை தொகுதியில் நிறைவேற்றி இருப்பார். இன்னும் சிவகங்கை முன்னேற்றம் அடைந்திருக்கும்.

தான் எடுக்கும் முடிவில் உறுதியுடன் அதை நிறைவேற்றும் வகையில் செயல்படுபவர். இதை நான் அவரிடம் நேரிலேயே பல முறை கண்டிருக்கிறேன். அனைவரையும் ஈர்க்கும் வகையில் அவர் செயல்பாடுகள் அமைந்திருக்கும். அவர் நூறாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து மக்கள் பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சென்னை ஆர்.கே.நகரில் சட்டமன்ற உறுப்பினராக பல்வேறு மக்கள் நலப் பணிகளை அங்கு செய்துள்ளார்.

சிவகங்கை காளையார் கோவில் பகுதிகளில் நூற்பாலை ஏற்படுத்தி 2000குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றி உள்ளார். இப்பணி மேலும் அதிகரிக்க வேண்டும். சிவகங்கையில்இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மாமன்னர் மருது பாண்டியர்களின் சிலை ருபாய் 50 லட்சத்தில் வைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்து உள்ளார் .இதற்காக முதல்வர். மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். கடந்த மூன்று ஆண்டுகளில் முதல்வர் தளபதி ஆட்சியில் காரைக்குடியில் கவிஞர் முடியரசனார் சிலை, பாகனேரி நகரம்பட்டியில் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்குவேலி அம்பலத்திற்கு ரூபாய் 50 லட்சத்தில் மணிமண்டபம் மற்றும் சிலை பணிகள் சிராவயலில் மகாத்மா காந்தியும் கம்யூனிஸ்ட் தலைவர்தோழர் ஜீவாவும் சந்தித்த இடத்தில் மணிமண்டபம், சிவகங்கை ராணி வேலுநாச்சியாரின் தளபதிகளில் ஒருவரான குயிலிக்கு சிலை போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது. தலைவர் கலைஞர் வழியில் சுதந்திர போராட்டத்திற்காக பாடுபட்டவர்களை கண்டறிந்து அவர்களை மதித்திடும் வகையில் முதல்வர் அவர்கள் செயலாற்றி வருகிறார் .

இதற்காக முதல்வர் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார்.

**பொன்னம்பல அடிகளார் பேச்சு!**

விழாவில் கலந்து கொண்டு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியதாவது. நேர்மை, வாய்மை, உழைப்பு, ஆகிய மூன்றையும் கொண்டவராக வி. ராஜசேகரன் பணியாற்றி வருகிறார்.. சிவகங்கை மக்களின் நன்மதிப்பை பெற்றவராக திகழ்ந்தார். இது தவிர ஆர்.கே.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டு மிகுந்த துடிப்புடன் பணியாற்றியுள்ளார். அடித்தள மக்களின் உரிமைகளை காப்பாற்றுவதில் தனது பணியினை தொடர்ந்து ஆற்றி வருகிறார். இந்த விழாவில் மும்மத தலைவர்கள் கலந்து கொண்டது அவரது பணியை பாராட்டு விதத்தில் அமைந்துள்ளது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று முழங்கிய இடம் சிவகங்கை மாவட்டமாகும் இதேபோல் திருக்கோட்டியூ ரில் கோபுரத்தின் மீது நின்று ராமானுஜர் அனைவரும் கேட்கும் வகையில் பொதுமக்களுக்கு மந்திரத்தை தெரிவித்தார். அதேபோல் மாமன்னர் மருது சகோதரர்கள், ராணி வேலுநாச்சியார்ஆகியோர் ஆண்டதும் இந்த மண்தான். இவர்களின் அடையாளமாக. வே.ராஜசேகரன் செயல்பட்டு வருகிறார். அவரிடம் ஒரு சமூகப் பார்வை உள்ளது. அதனால் தான் பல்வேறு பணிகளை செய்துள்ளார். இவர் நகர் மன்ற தலைவராக இருந்த போது குடிசைகளுக்கு வரியை ரத்து செய்துள்ளார். இதே போல் ஆர்.கே. நகர் தொகுதியில் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றி உள்ளார். மனிதர்களில் அவர் ஒரு சமுதாய பற்றாளர் என்பது இதன் மூலம் தெரிகிறது. பெருந்தலைவர் காமராஜரை பின்பற்றி இன்று வரை அவரது வழியில் செயல்பட்டு வருகிறார்.

கப்பலோட்டிய தமிழர் வ .உ .சி யை பெருமைப்படுத்தியவர் பாரதியார். அவரது புகழை கொண்டு சேர்த்தவர் பாரதியார். அத்தகைய வழியில் இது போன்று அடித்தள மக்களுக்கும் ஏழை,எளிய மக்களுக்கு அவரது சேவை தொடரவேண்டும். .ராஜசேகரனின் பொதுவாழ்வு பணிக்காக அவரை பாராட்டுகிறேன்.

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசினார்.

**அமைச்சர் ராஜகண்ணப்பன் பேச்சு!**

அமைச்சர் ஆர். எஸ் . ராஜ கண்ணப்பன் பேசியதாவது.

ராஜசேகரன் அவர்களை சிறு வயதுமுதல் தெரியும். எனது தந்தையாருடன் நெருங்கி பழகியவர். அவரது அரசியல் மற்றும் சமூகப் பணிகளை நான் நேரில் பார்த்துஉள்ளேன். அவரால் தான் நான் அரசியல் பணியில் ஈர்க்கப்பட்டேன். இன்றும் இந்த 85, வயதிலும் அனைத்து நிகழ்ச்சிகளுக் கும் நேரில் சென்று வாழ்த்தி வருகிறார். அனைத்து மக்களாலும், அனைத்து சமுதாயத்தினராலும் பாராட்டும் வகையில் அவரது பணி உள்ளது. அவரது பணி தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன். எனது தொகுதி கமுதியில் அவரது முயற்சியால் நூற்பாலை துவங் கப்பட உள்ளது. இதில் நூற்று கணக்கானவர்களுக்கு வேலைகிடைக்கும். அவர்களது குடும்பங்கள் வளம் பெறும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி உட்பட பலர் ராஜசேகரனை பாராட்டி பேசினார்கள்.



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்று உள்ள மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை 3.7.2024 அன்று ஹூஸ்டன் டெக்சாஸ் பியர்லேண்ட் மேயர் கெவின் கோல், ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தின் Asia Studies Dean முனைவர் ஓ. கானர் ஆகியோர் சந்தித்து "தமிழ் இருக்கை" அமைய உதவிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.